

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் வ.வீரபாண்டியன் திருவுருவப்படத்தை திறந்து வைத்து அன்னாரது குடும்பத்திற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ரூ.5லட்சம் நிதி உதவியை ஒன்றியச் செயலாளர் படப்பை.அ.மனோகரன் தலைமையில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச்செயலாளர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### படப்பை ஆ.மனோகரன் தலைமை! குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்

# வ.வீரபாண்டியன் திருவுருவப்படம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்!

## அன்னாரது குடும்பத்திற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ரூ.5 லட்சம் நிதி உதவி வழங்கல்!

காஞ்சிபுரம், மார்ச் 12-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் வ.வீரபாண்டியன் திருவுருவப்படத்தை திறந்து வைத்து அன்னாரது குடும்பத்திற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் படப்பை ஆ. மனோகரன் தலைமையில் ரூ.5லட்சம் நிதி உதவியை குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்துறை அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில்,10/03/2026 மாலை 6.00 மணிக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வ. வீரபாண்டியன் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை. அ. மனோகரன் அவர்கள் தலைமையில் குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ் கர்ணன் முன்னிலையில் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன், காங்கிரஸ் கட்சி மாநில தலைவர் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு. செல்வ பெருந்தகை திருஉருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் குடும்ப நல நிதியாக 5 லட்சம் ரூபாய் வழங்கினர்.

நிகழ்ச்சியில் குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் மணி குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ. வந்தேமாதரம், ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள். வ. நந்தகோபால், சி. பார்த்தசாரதி, மூ. ராஜேந்திரன், குமுதா சுமன், டி. லோகநாதன், த. ஏழுமலை.என்.வாசு, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் க.ப. ஆடலரசு, ஜே. கோகுல்நாதன், மல்லிகா நடராஜன், ஏ.இ. பஞ்சாட்சரம், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏடிஎம் வினோத் மற்றும் கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### வர்த்தகம் மற்றும் தொழிற்துறையில் செயல்பட்டு வரும் புத்தாக்க நிறுவனங்களில்

# பெண்கள், தாழ்த்தப்பட்டோர் - பட்டியலின மக்களின் பங்களிப்பை அதிகரிக்க திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

## மக்களவையில் – எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



சென்னை, மார்ச் 12-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 10.3.2026 அன்று மக்களவையில், தொழிற்துறையில் செயல்பட்டு வரும் புத்தாக்க நிறுவனங்களில் பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகரிக்க, ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? என்றும் பிற்படுத்தப்பட்டோரின் நலனைப் பாதுகாக்க ஏதேனும் முயற்சிகள் உள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார். ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில பின்வருமாறு:-

கடந்த சனவரி 2026 மாத நிலவரப்படி, இந்தியா முழுவதும் 2,12,283 புத்தாக்க நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், தமிழ்நாட்டில் மட்டும் 14,099 வர்த்தக நிறுவனங்கள் செயல்படுகின்றன என்றும், இவற்றில் பெண் இயக்குனர்களை கொண்ட புத்தாக்க நிறுவனங்கள் இந்தியா முழுவதுமாக 1,02,054 நிறுவனங்கள் உள்ளன என்றும், தமிழ்நாட்டில் 7042 நிறுவனங்கள் பெண்களை இயக்குனர் களாக கொண்டு செயல்பட்டு வருகின்றன என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறையின் சார்பில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் பல்வேறு நிதியுதவி மற்றும் வங்கி கடன்கள் ஆகியன வழங்கப்பட்டு வருவதாகவும், சிறு பான்மைத் துறையினரின் மூலம் தொழில் முனைவோருக்கான பிரதம மந்திரி சூரிய ஒளி மின்சார திட்டம், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், கடன் வசதிகளில் முன்னுரிமை, சந்தை வாய்ப்புகளை உருவாக்கி தருதல் ஆகிய வசதிகள் செய்து தரப்படுகின்றன என்று மக்களவையில் தெரிவித்தார்.


திறன் மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலம் தொழில் முனைவோருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள், கணிணி மூலம் சந்தை வாய்ப்புகள், பழங்குடியினருக்கான நிதியுதவி என பல்வேறு முயற்சிகள் புத்தாக்க நிறுவனங்களுக்கு அளிக்கபடுதிறது என்றும், சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் சார்பில், பிற்படுத்தப்பட்டோர், மற்றும் தாழ்த்தப்பட்டோர், தொழில் துவங்க தேவையான கடன் வசதிகள், மற்றும் நிதிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் நிதிச் சேவைகள் துறையின் சார்பில் பல்வேறு வங்கிகள் மூலம் ரூபாய் 10 இலட்சத்திலிருந்து 1 கோடி வரை கடன் வசதி அளிக்கப்பட்டு வருகிறது என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் ரூபாய் 808 கோடிகள் அளவிற்கு நிதி உறுதியளிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் நாட்டிற்கென ரூபாய் 85 கோடிகள் அளவிற்கு புத்தாக்க நிறுவனங்களுக்கு கடன் உறுதியளிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா அவர்கள் மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலளித்தார்.

### வெளிநாட்டுக் கடன்களைச் சமாளிப்பதில்

# ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் போதுமான அளவில் உள்ளதா?

## மாநிலங்களவையில் – எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி. மார்ச் 12-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 10 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில் வெளிநாட்டு கடன்களை சமாளிப்பதில் ஒன்றிய அரசு தேவையான முன்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? என்றும் அந்நிய செலவாணி கையிருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள உரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

கடந்த செப்டம்பர் 2025, நிலவரப்படி இந்திய அரசின் வெளிநாட்டு கடன்களின் செலவு 74600 கோடிகள் அமெரிக்க டாலர்களாக உள்ளது என்றும், இவற்றில் சர்வதேச குறுகிய கால கடன்கள், வர்த்தகத் துறை சார்ந்த கடன்கள் ஆகிய அனைத்தும் அடங்கும் என்றும், வெளிநாட்டு கடன்கள் மற்றும் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக்கத்திற்கான விகிதாச்சார அளவு 19 சதவீதமாக உள்ளது என்றும் கடன் அடைக்கும் விகிதம் தற்போது ஆறு சதவீத அளவிற்கும் கட்டுக்குள் உள்ளது என்றும், வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் பணமதிப்பு அதிகரித்துள்ளது என்றும், அந்நிய செலவாணி கையிருப்பு போதுமான அளவு உள்ளது என்றும் ஒன்றிய அரசு தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.



பம்மல் தெற்கு பகுதி 8வது வட்ட வட்டக் கழகப் பிரதிநிதி கழக மூத்த முன்னோடி ஏ.முனுசாமி மறைவெய்தியதையொட்டி இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ,துணை மேயர் கோ. காமராஜ், பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும் பம்மல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள்,வட்டக் கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட–மாநகர–பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தினர்.





திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 9, 2,11, 26, 27, ஆகிய வார்டுகளில் 1 கோடியே 78 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை, நீர் தேக்க தொட்டி, இரண்டு ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணிகளை அமைச்சர் ஆவடி சாமு. நாசர் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து திருநின்றவூர் நடுகுத்தகை கிராமத்தில் உள்ள 111 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார் இதில் நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, நகராட்சி ஆணையர் ஜீவிதா, வட்டாட்சியர் கண்ணன், நகராட்சி பொறியாளர் குமார், நகரச் செயலாளர் தி.வை.இரவி, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், பா.நரேஷ்குமார், ஜி.விமல்வர்ஷன், இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், சரளா நாகராஜ், ரவி, அன்பழகன், குணசேகரன், பி.எல்.ஆர்.தேவியோகா, சுரேஷ், பாபு, பூமணி, ஜெயகுமார், உஷாராணி வெங்கடேசன், தங்கராஜ், மு.ப.மகேஷ்குமார், அசோக்குமார், சலிம், வெங்கடேசன், ஜெ.ரவிச்சந்திரன், செந்திவேல், பால்ராஜ் திமுக நிர்வாகிகள் உள்ளார்.

### முதல்வர் திறந்து வைக்கிறார்! மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முழுவுருவ வெண்கலச் சிலை!

## பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, மார்ச்.12-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் போரூர் நாற்சந்தியில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரின் முழுவுருவ வெண்கலச் சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக இன்று (12.03.2026) காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சி மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளர், காரம்பாக்கம் க.கணபதி, தலைமையில், கழக பொருளாளர், திருமிகு. டி.ஆர்.பாலு, எம்.பி., அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆகியோரின் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன். வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், எ.எம்.வி.பிரபாகரராஜா, மு.மகேஷ்குமார், துணை மேயர், பகுதி - ஒன்றிய கழக செயலாளர்கள்: கே. கண்ணன், மு.ராஜா, எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், வே,ஆனந்தம், எம்.விநாயகமூர்த்தி,ஜி.வெங்கடேசன்

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.அருணாசலம், க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, காசிமுத்துமாணிக்கம், பி.டி.பாண்டிசெல்வம், 'எஸ்.பத்மபிரியா, ரத்னா லோகேஸ்வரன்,

வேளச்சேரி பி.மணி மாறன், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன், வ.செல்வகுமார், வீரகனிமொழி, எம்.ரீதரன், சைதை மா.அன்பரசன், எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ. அரிகிருஷ்ணன், எஸ்.டி.தங்கராஜன், ரா.பாலசுந்தரம், பி.எஸ். முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், தா.பஷீர், டி. ஜே.பாஸ்கர்

வி.ராஜேஷ், அ.விஜயபாலா, முகப்பேர் கே.நீலகண்டன், கே.குமரேசன், S.P. அருள், ச.சங்கர்கணேஷ், செ.ரவி, எஸ்.பாலமுருகன்,

பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்பாரதி, கே.ராஜீ, ஆர். கர்ணல், தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், ஆ. மாலினி, ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், எ. எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், ப.கிரிஜா, என்.ரவி, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த. ரமேஷ், சி.சுந்தர், ஜெ. பாஸ்கரன் தி.சார்லஸ், ஆ.செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், எம்.இ. ஸ்டாலின், ப.ஆலன், எம். ரூபன்,

மதுரவாயல் தெற்கு - வடக்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள்: செல்விரமேஷ், ஹேமலதாகணபதி, சாந்திஇராமலிங்கம், ரமணிமாதவன், மாவட்ட பிரதிநிதிகள்: க.கைலாசம், இரா.ராஜேந்திரன், எம். எல்.நாதன், எஸ்.ரவி, ஏ.டி. எத்திராஜ், ஜி.ரா மகிருஷ்ணன், எஸ்.திருநாவுக்கரசு, கே.நாராயணன், ஆர்.சிவலிங்கம், கோ.ராமலிங்கம், க.பிருந்தாவனன், ஆர். ரசூல்தீன், ஆர்.ராகேஷ், ச. எழில்அரசு, கே. ராஜ்குமார், கே.முரளி, பி.சங்கர், எம்.ஆர்.சதீஷ், ஜி.குப்புசாமி, எம்.கே.ஞானசேகரன், கு.சதீஷ்குமார், கே. சங்கர், கே.எஸ்.மாறன்குமார் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள், மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் வெல்லும் தமிழ்ப் பெண்கள், பாக இளைஞர் அணி தோழர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 73–வது பிறந்த நாள் சேப்பாக்கம் 61 "அ" வட்டத்தில் 500 பேருக்கு அறுசுவை மதிய உணவு இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., வழங்கினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நன்னிலம் நடராசன்

## மார்ச் 12 (2002)



நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக்காக்க செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள் நன்னிலம் வட்டத்தில் கழகம் ஆல்போல் வளர்த்தவர். கழகக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக பணியாற்றியவர்.

தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல போராட்டங்களில் பங்கேற்றவர். நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இளமைப்பருவம் முதல் இறுதிநாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவை பேச்சால் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகச் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**